17.4.2015

தினமணி

## வளி மண்டலச் சுழற்சி நீடிப்பு: இன்றும் மழை நீடிக்கும்

தமிழக வான் பகுதியில் வளி மண்டல மேல் அடுக்குச் சுழற்சி தொடர்ந்து நீடிப்பதால் வெள்ளிக்கிழமையும் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.தமிழகத்தில் கோடைகாலம் தொடங்கியுள்ள நிலையில், குமரிக் கடல் - லட்சத்தீவுகளை ஒட்டியுள்ள பகுதியில் வளி மண்டல மேல் அடுக்குச் சுழற்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கடந்த சில நாள்களாக தமிழகம் முழுவதும் மழை பெய்து வருகிறது.இந்த நிலையில் வெள்ளிக்கிழமையும் மழை பெய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வளி மண்டல மேல் அடுக்குச் சுழற்சி அதே இடத்தில் நீடிக்கிறது. இதன் காரணமாக தமிழகத்தின் பல இடங்களில் வெள்ளிக்கிழமை மழை பெய்யும். உள் மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்யும். சென்னையைப் பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும்; சில இடங்களில் மழை பெய்யும் என்றனர்.

வெள்ளிக்கிழமை காலை வரையிலான நிலவரப்படி, தேனி மாவட்டம்-பெரியகுளத்தில் 150 மி.மீ. மழையும், தரமணியில் 120 மி.மீ. மழையும் பெய்துள்ளது.தாராபுரம், அரண்மனைபுதூரில் 110 மி.மீ, மீனம்பாக்கம், திருமங்கலம், தேவக்கோட்டை, ஈரோட்டில் 100 மி.மீ. மழை பதிவானது.

## விவசாயிகளுக்கு ரூ.506 கோடி நிவாரணம்: உ.பி. அரசுக்கு ராஜ்நாத் சிங் அறிவுறுத்தல்

பருவம் தவறிய மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மத்திய அரசு வழங்கிய ரூ.506 கோடி நிவாரணத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று உத்தரப் பிரதேச அரசை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அறிவுறுத்தியுள்ளார்.உத்தரப் பிரதேச மாநிலத்தில் பருவம் தவறிய மழையாலும், ஆலங்கட்டி மழையாலும் 113 லட்சம் ஹெக்டேர் பயிர்கள் சேதமடைந்தன. இதனால் ஏற்பட்ட கடன் சுமை காரணமாக சில விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டனர்.இந்நிலையில், பயிர்ச் சேதமடைந்த சில பகுதிகளை ராஜ்நாத் சிங் வியாழக்கிழமை பார்வையிட்டார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

பருவம் தவறிய மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் துயரைப் போக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவது அவசியம்.

இந்த விவகாரத்தை அரசியல் ஆதாயத்துடன் அணுகக் கூடாது. மாநில அரசுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்க மத்திய அரசு தயாராக உள்ளது. விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து மாநில அரசைக் குறை கூற நான் இங்கு வரவில்லை. விவசாயிகள் நலனுக்காக அனைவரும் கரம் கோர்த்து செயல்பட வேண்டும் என்றே அரசியல் கட்சிகள் உள்பட அனைவரிடமும் வலியுறுத்துகிறேன். விவசாயிகள் நலனுக்காக பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.50 சதவீதப் பயிர்கள் சேதமடைந்திருந்தால் மட்டுமே நிவாரணம் வழங்க முடியும் என்ற விதியைத் தளர்த்தி, 33 சதவீதப் பயிர்கள் பாதிக்கப்பட்டிருந்தால்கூட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்று மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

விவசாயிகள் தற்கொலை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அவர்களது பிரச்னைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.உத்தரப் பிரதேச விவசாயிகளுக்கு மத்திய அரசு சார்பில் வழங்கப்பட்ட ரூ.506 கோடி

நிவாரணத் தொகையை மாநில அரசு உடனடியாக வழங்க வேண்டும் என்று ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

**திண்டுக்கல் மாவட்டத்தில் 407 மி.மீ. மழை**

திண்டுக்கல் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் வியாழக்கிழமை காலை வரை 407 மி.மீட்டர் அளவு மழை பெய்துள்ளது. நத்தம், வேடசந்தூர், அய்யலூர் உள்ளிட்ட பகுதிகளிலும், திண்டுக்கல் நகரிலும் மாலையில் பெய்த மழை, அதிகாலை வரை தொடர்ந்து பெய்தது. நத்தம், குஜிலியம்பாறை, வேடசந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் கடுமையான வறட்சி நிலவி வந்த நிலையில், தற்போது பெய்துள்ள கோடை மழை மானாவாரி பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திண்டுக்கல் பகுதியில் பாதாளச் சாக்கடைப் பணிகளுக்காக தோண்டப்பட்ட குழிகளில் மழைநீர் தேங்கியதால், சாலையில் இருந்த பள்ளம் தெரியாமல் வாகன ஓட்டிகள் அவதியுற்றனர்.

இந்த நிலையில், சென்னையிலிருந்து போடி செல்லும் அரசு விரைவுப் பேருந்து திண்டுக்கல் காட்டாஸ்பத்திரி அருகே, மழைநீர் தேங்கிய பள்ளத்தில் வியாழக்கிழமை சிக்கிக்கொண்டது. பள்ளத்திலிருந்து பேருந்தை மீட்பதில் சிரமம் ஏற்பட்டதை அடுத்து, பயணிகள் அனைவரும் மாற்றுப் பேருந்தும் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர். திண்டுக்கல் மாவட்டத்தில் புதன்கிழமை முதல் வியாழக்கிழமை அதிகாலை வரை பெய்த மழை அளவு விவரம் (மி.மீட்டரில்): திண்டுக்கல் 49.28, கொடைக்கானல் 7.10, நத்தம் 38, நிலக்கோட்டை 17.20, பழனி 81, வேடசந்தூர் 44, சத்திரபட்டி 33, வேடசந்தூர் புகையிலை மையம் 44, கொடைக்கானல் போட் கிளப் 5.75, காமாட்சிபுரம் 88. மொத்தம் 407.63 மி.மீட்டர் மழையளவு பதிவாகியுள்ளது.

**மாவட்டத்தில் பரவலாக கன மழை: அணைகளுக்கு நீர்வரத்து**

தேனி மாவட்டத்தில் ஏப்ரல் 13 ஆம் தேதி முதல் பரவலாக கனமழை பெய்து வருவதால், அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

பெரியகுளத்தில் புதன்கிழமை இரவு அதிகபட்சமாக 145 மி.மீ. அளவு மழை பெய்துள்ளது. ஆண்டிபட்டியில் 65 மி.மீ., தேனியில் 106.8, வீரபாண்டியில் 28, கூடலூரில் 23.5, உத்தமபாளையத்தில் 25, போடியில் 2.8, வைகை அணை நீர்ப்பிடிப்பில் 102, சோத்துப்பாறையில் 42, மஞ்சளாறில் 65 மி.மீ., அளவுக்கு மழை பெய்துள்ளது. பெரியாறு அணை நீர்ப்பிடிப்பில் 5 மி.மீ., தேக்கடியில் 8.6 மி.மீ., மழை அளவு பதிவாகியுள்ளது.அணைகளின் நீர்மட்டம்: வைகை அணை நீர்மட்டம் வியாழக்கிழமை காலை 36.78 அடியாக இருந்தது. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 555 கனஅடி. அணையில் இருந்து விநாடிக்கு 40 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. பெரியாறு அணை நீர்மட்டம் 111.50 அடி. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 708 கனஅடி. அணையில் இருந்து தமிழகப் பகுதிக்கு விநாடிக்கு 150 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 86.10 கனஅடி. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 25 கனஅடி. மஞ்சளாறு அணை நீர்மட்டம் 30.80 அடி. அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 103 கனஅடி.

**தொடர் மழை: முல்லைப் பெரியாற்றில் நீர்வரத்து அதிகரிப்பு**

தேனி மாவட்டம், உத்தமபாளையம் பகுதியில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கோடை மழை காரணமாக, முல்லைப் பெரியாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளது. இம்மழையால், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் கோடைப் பயிர் விவசாயத்துக்கு உழவுப் பணி தீவிரமாக நடைபெறத் தொடங்கியுள்ளது. தேனி மாவட்டம் முழுவதும் கடந்த வாரம் கடுமையான வெயில் நிலவியது. வெயில் அளவு உச்சகட்டமாக

104 டிகிரி வரை சென்றது. இதனால், பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டனர். இந்நிலையில், முல்லைப் பெரியாற்றில் நீர்வரத்து குறைந்ததால், மாவட்டத்திலுள்ள ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சிகளில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் பற்றாக்குறை நிலவியது. கோடையில் குடிநீர் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என்று பொதுமக்கள் அச்சமடைந்தனர். இதனிடையே, கடந்த சில தினங்களாக மாவட்டம் முழுவதும் பரவலாக பெய்த கோடை மழையில் வெப்பம் தணிந்ததுடன், குடிநீர்ப் பற்றாக்குறையும் குறைந்துள்ளது. முல்லைப் பெரியாறு நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த தொடர் மழையால், அணைக்கு 708 கன அடியாக நீர்வரத்து அதிகரித்தது. புதன்கிழமை இரவில், கூடலூரில் 23.5 மி.மீ., உத்தமபாளையம் 25 மி.மீ., வீரபாண்டி 28 மி.மீ., வைகை அணையில் 102 மி.மீ. மழை பெய்தது. முல்லைப் பெரியாறு அணையில் இருந்து குடிநீருக்காக வெளியேற்றப்படும் 150 கனஅடி நீருடன், தற்போது பெய்த மழையால் ஓடை மற்றும் கால்வாய்களில் இருந்து வரும் தண்ணீரும் சேர்ந்து, வைகை அணைக்கு கூடுதலாக விநாடிக்கு 555 கனஅடி தண்ணீர் சென்றடைகிறது.விவசாயிகள் மகிழ்ச்சி: கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் 2ஆம் போக அறுவடை நிறைவடையும் தருவாயில் உள்ளது. அதனைத் தொடர்ந்து, உளுந்தம் பயறு, பாசிப் பயறு, துவரை உள்ளிட்ட கோடைப் பயிர் விளைவிக்கக் கூடிய மாதத்தில் பெய்த இம்மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது, உத்தமபாளையம், சின்னமனூர், மார்க்கையன்கோட்டை, சீலையம்பட்டி, கோட்டூர் ஆகிய பகுதிகளில் அறுவடை முடிந்த வயல்களில், உழவு செய்து பயிர்கள் விதைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

**சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் விடிய விடிய மழை**

சிவகங்கை மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் புதன்கிழமை இரவு முதல் விடிய விடிய பலத்த மழை பெய்தது. சாலைகளில் மழைநீர் தேங்கியதால் அவை சேதமடைந்து காணப்படுகின்றன.

ராமநாதபுரத்தில் புதன்கிழமை இரவு இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது.வியாழக்கிழமை அதிகாலையிலும் இது தொடர்ந்தது. நகரில் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கியது. இதனால் வாகன ஓட்டிகள் பெரிதும் அவதியடைந்தனர். ராமநாதபுரம் நகரின் பிரதானச் சாலைகளான சாலைத் தெரு, சிகில்ராஜவீதி எனப்படும் சுவாமி விவேகானந்தர் சாலை ஆகிய பகுதிகளில் பெரிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. ராமநாதபுரம் மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை வரை பெய்த மழையளவு (மி.மீட்டரில்) முதுகுளத்தூர்- 43.20, பாம்பன்- 26.40, பரமக்குடி- 45.60, ராமநாதபுரம்- 12.40, திருவாடானை- 18.60, தொண்டி- 10.10, பள்ளமோர்குளம்- 12, மண்டபம்- 38, ராமேசுவரம்- 25.20, தங்கச்சிமடம்- 30, வட்டாணம்-16, தீர்த்தாண்டதானம்- 36, ஆர்.எஸ்.மங்கலம்- 82, கடலாடி- 60.60, வாலிநோக்கம்- 18.60. மொத்த மழையளவு- 514.70. சராசரி மழையளவு- 32.17.கமுதி: கமுதி பகுதியிலும் புதன்கிழமை இரவு தொடங்கி விடிய விடிய தொடர்ந்து மழை பெய்தது. மழையின் அளவு 40 மி.மீ. பதிவாகி இருந்தது. ஏற்கனவே 3 நாள்களுக்கு முன்பு 68 மி.மீ. அளவு மழை பெய்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் கோடை மழையை விவசாயிகள் எதிர்பார்த்துள்ளனர்.திருப்புவனம்: சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மணலூர், பழையனூர் ஆகிய பகுதிகளில் புதன்கிழமை இரவு நல்ல மழை பெய்தது.

திருப்புவனத்தில் லேசான மழை பெய்து வந்த நிலையில் புதன்கிழமை நள்ளிரவு தொடங்கிய மழை காலை வரை இடைவிடாது பெய்தது. இதனால் பூமி குளிர்ந்தது. திருப்புவனம், திருப்பாச்சேத்தி, மணலூர், பழையனூர் உள்ளிட்ட கிராமங்களில் கால்நடைகளுக்கு தேவையான புற்கள் துளிர்விடும் என விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

### ராஜபாளையத்தில் 44 மி.மீ. மழை

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் புதன்கிழமை அதிகபட்சமாக 44 மி.மீ. மழை பெய்துள்ளது. மாவட்டத்தின் பிற பகுதிகளில் அதே நாள் பெய்துள்ள மழை அளவு வருமாறு: சாத்தூரில் 39 மி.மீ., சிவகாசியில் 2.8.மி.மீ.,வெம்பக்கோட்டை அணைப் பகுதியில் 18 மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூரில் 7 மி.மீ., பிளவக்கல் அணைப் பகுதியில் 3 மி.மீ., கோவிலாறு பகுதியில் 5 மி.மீ. மழை பெய்துள்ளது.

### கமுதி பகுதிகளில் மழை: கோடை உழவு தீவிரம்

கமுதி பகுதிகளில் பெய்த மழை காரணமாக, கோடை உழவில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கமுதி பகுதியில் கடந்த 2 நாள்களாக ஓரளவு நல்ல மழை பெய்துள்ளது. இதையடுத்து விவசாயிகள் கோடை உழவில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். இந்த மழை நீடித்தால், கோடை விவசாயம் செய்ய வாய்ப்பாக இருக்கும் என்றும் அறுவடைக்கு தயாராக உள்ள மிளகாய், பருத்தி செடிகளுக்கு நல்ல பயன் அளிக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

### ஏப்ரல் 24-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கோவை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஏப்ரல் 24-ஆம் தேதி நடைபெறவுள்ளது. மாவட்ட ஆட்சியர் அலுவலக முதன்மைக் கூட்ட அரங்கில். ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில்

விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. இதில், மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான தங்களது பிரச்னை, கோரிக்கைகளை நேரிலும், மனுக்கள் மூலமாகவும் தெரிவித்து, தீர்வு காணலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**கோவை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஏப்ரல் 24-ஆம் தேதி நடைபெறவுள்ளது.**

மாவட்ட ஆட்சியர் அலுவலக முதன்மைக் கூட்ட அரங்கில். ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. இதில், மாவட்டம் முழுவதும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான தங்களது பிரச்னை, கோரிக்கைகளை நேரிலும், மனுக்கள் மூலமாகவும் தெரிவித்து, தீர்வு காணலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

## அமராவதி அணை நீர்மட்டம் உயர்வு: விவசாயிகள் மகிழ்ச்சி

கோடை மழை தீவிரம் அடைந்ததையடுத்து அமராவதி அணை நீர்மட்டம் கடந்த சில நாள்களாக உயர்ந்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.உடுமலையை அடுத்துள்ள அமராவதி அணை திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 55 ஆயிரம் ஏக்கர் பழைய, புதிய ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன. மேலும், நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கும் குடிநீர் ஆதாரமாக இந்த அணை விளங்கி வருகிறது. இந்த ஆண்டு தொடக்கத்தில் ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் தொடர்ந்து பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்ட நிலையில் அணையின் நீர்மட்டம் குறையத் தொடங்கியது.இந்த ஆண்டு வழக்கத்தை விட முன்னதாக பிப்ரவரி இரண்டாவது வாரத்திலேயே கோடை வெயில் தொடங்கிய நிலையில் அணையின் நீர் மட்டம் சரிந்தது. அணையில் 10 அடி மட்டுமே நீர்

இருப்பு இருந்தது. இதனால் கோடை காலக் குடிநீர்ப் பிரச்னையைச் சமாளிக்க முடியுமா என அமராவதி ஆற்றின் கரையோர கிராம மக்கள் கவலை அடைந்து வந்தனர்.இந்நிலையில், கடந்த ஒரு வாரத்தில் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கோடை மழை காரணமாக அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. இதனால் குடிநீர்த் தேவையை ஓரளவு சமாளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக கரையோர கிராம மக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.அணை நிலவரம்: 90 அடி உயரமுள்ள அணையில் வியாழக்கிழமை காலை 8 மணி நிலவரப்படி 33 அடி நீர் மட்டம் இருந்தது. அணைக்கு 264 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. அணையில் 491 மில்லியன் கன அடி நீர் இருப்பில் இருந்தது. அணையில் இருந்து 8 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது. அணைப் பகுதியில் மழை அளவு 2 மி.மீ. பதிவாகியிருந்தது.

### உதகை குன்னூரில் பரவலாக மழை

நீலகிரி மாவட்டத்துக்கு உள்பட்ட உதகை, குன்னூர், கூடலூர் பகுதிகளில் வியாழக்கிழமை பரவலாக மழை பெய்ததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.உதகை மற்றும் குன்னூரில் காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மதியம் இப்பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. இதன் காரணமாக இப்பகுதிகளுக்கு வந்த சுற்றுலாப் பயணிகள் சிரமப்பட்டனர். இந்த மழையால், காய்கறி மற்றும் தேயிலை விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கூடலூரில்... கூடலூரில் கனமழை பெய்ததில் சாலைகளில் வெள்ளம் சூழ்ந்தது.கூடலூர் அதன் சுற்றுப்புறப் பகுதியில் வியாழக்கிழமை மதியம் சுமார் ஒரு மணி நேரம் கனமழை பெய்தது. இதில், சாலைகளில் ஓடிய மழை வெள்ளத்தால் வாகனங்களை இயக்கமுடியாமல் வாகன ஓட்டிகள் சிரமத்திற்குள்ளாகினர். வியாபாரிகள் உள்பட பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

## காய்கறிக் கண்காட்சிக்கு தயாராகி வரும் நேரு பூங்கா

கோத்தகிரியில் மே மாதம் நடைபெறவுள்ள காய்கறிக் கண்காட்சிக்காக நேரு பூங்காவில் ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில் கோடை விழா, கோத்தகிரி காய்கறிக் கண்காட்சியுடன் ஆண்டுதோறும் துவங்கும். இதைத் தொடர்ந்து, உதகை மலர்க் கண்காட்சி, குன்னூர் பழக் கண்காட்சிகள் நடைபெறும். இந்தாண்டு கோடை விழாவுக்கான காய்கறிக் கண்காட்சி, மே 2, 3 தேதிகளில் நேரு பூங்காவில் நடைபெறவுள்ளது. விழாவை மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் துவக்கி வைக்கிறார்.இதற்காக, தற்போது பூங்காவில் பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டு பூங்காவை தூய்மைப் படுத்தி பல்வேறு வகையான பூக்களின் நாற்றுகள் நடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.இதுகுறித்து பேரூராட்சித் தலைவர் சை.வாப்பு கூறுகையில், பூங்காவை அழகுபடுத்தும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன. பணிகள் நிறைவடைந்தவுடன், பேரூராட்சி பராமரிப்பில் உள்ள பூங்கா, தோட்டக் கலைத்துறை வசம் ஒப்படைக்கப்படும் என்றார்.

## உழவர் நண்பர்களுக்கு சேவை ஊதியம்

ஓமலூர் அருகே காடையாம்பட்டி வட்டார விவசாய நண்பர்களுக்கு சேவை ஊதியம் வியாழக்கிழமை வழங்கப்பட்டது.காடையாம்பட்டி வட்டாரத்தில் பூ வகைகள், அவரை, துவரை, மஞ்சள் ஆகியவை அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. விவசாயிகளை ஊக்கப்படுத்தவும், பல்வேறு ஆலோசனைகள் வழங்கி விவசாயப் பணிகள் மேற்கொள்ளவும் அட்மா திட்டத்தின் கீழ் உழவர் நண்பர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். காடையாம்பட்டி வட்டாரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 20 பேருக்கு ஆண்டுதோறும் ரூ.4 ஆயிரம் சேவை ஊதியமாக வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான சேவை ஊதியம் வழங்கும் விழா காடையாம்பட்டி வேளாண் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

ஓமலூர் சட்டப்பேரவை உறுப்பினர் பல்பாக்கி சி.கிருஷ்ணன், உழவர் நண்பர்கள் 20 பேருக்கு சேவை ஊதியத்தை வழங்கினார்.கோடை காலத்தில் செய்யப்படும் வேளாண் பணிகள், வயல் மேம்பாட்டுப் பணிகள் குறித்து வேளாண் அலுவலர்கள் பேசினர்.வேளாண் உதவி இயக்குநர் அ.நாசர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

## சின்னவெங்காயப் பயிரில் இலைப்பேன் தாக்குதலை கட்டுப்படுத்த யோசனை

அரியலூர் மாவட்டத்தில் இலைப்பேன் தாக்குதலில் இருந்து சின்னவெங்காயத்தை காப்பது குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜாஜோஸ்லின் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:அரியலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம் 125 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்ட தட்பவெப்ப நிலைக்கு கோ. 1 முதல் 5 வரை மற்றும் எம்டியு 1 ஆகிய சின்னவெங்காய ரகங்கள் ஏற்றது. வெங்காயம் நட்ட 30 நாட்கள் கழித்து மேலுரமாக ஏக்கருக்கு 12 கிலோ தழைச்சத்து கொடுக்கக் கூடிய யூரியா உரத்தை அளிக்க வேண்டும். சின்னவெங்காயத்தில் பல்வேறு நோய்கள் தாக்கி மகசூல் இழப்பை உண்டு பண்ணுகிறது. குறிப்பாக, இலைப்பேன் தாக்குதல் பெரும் இழப்பை விவசாயிகளுக்கு ஏற்படுத்தி வருகிறது. இந்நோய் தாக்குதலின் போது பூச்சிகள் வெளிர் மஞ்சள் நிறத்தில் காணப்படும் இந்தப் பூச்சிகள் இலைகளை சுரண்டி உறிஞ்சும். இதனால், இலைகள் வெண்திட்டுக்களாகக் காணப்படும். இலைகள் நுனியில் வாடும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு மீதைல் டெமட்டான் 200 மி.லி. அல்லது பாஸ்போமிடான் 200 மி.லி. என்ற அளவில் தெளிக்க வேண்டும். அதிகம் தழைச்சத்து இடுவதையும், நெருக்கி நடுவதையும் தவிர்க்க வேண்டும். மேலும், வெங்காய ஈ தாக்குதலின்போது மண்ணில் உள்ள இடுக்குகளில் முட்டையிடும். அவற்றிலிருந்து வரும் சிறிய வெண்ணிறப்புழுக்கள் நிலத்தடியில் உள்ள தண்டுப்பகுதி மற்றும்

வெங்காயத்தை குடைந்து தின்று அழுகச் செய்யும். இதை கட்டுப்படுத்த புரபனோஸ் 50இசி. ஒரு மிலி மருந்தை ஒரு லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். அறுவடைக்கு 15 நாட்களுக்கு முன்பு மாலிக்டைரக்சைடு என்ற பயிர் முளைப்பை கட்டுப்படுத்தும் பயிர் விளையல் ரசாயனப்பொருளை 2.5 மி.லி. தண்ணீர் என்ற விகிதத்தில் இலைவழி ஊட்டமாக தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வெங்காயத்தின் சேமிப்பு காலத்தை அதிகப்படுத்தலாம். மேலும், வெங்காயத்தை பிடுங்கிய பிறகு மேல்தாள்களை நீக்கி வெங்காயத்தை காயவைக்க வேண்டும். பிறகு நல்ல காற்றோட்டமுள்ள அறைகளில் சேமித்து வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் சின்ன வெங்காயத்தில் அதிக மகசூல் பெறமுடியும். சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய அலுவலகத்தை தொடர்புகொண்டு மேலும் தகவல் பெறலாம்.

**வேந்தன்பட்டியில் கால்நடை மருத்துவ முகாம்**

பொன்னமராவதி அருகே உள்ள வேந்தன்பட்டியில் கால்நடைகளுக்கான செயற்கைமுறை கருவூட்டல், மலட்டு தன்மை நீக்க முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.வேளாண்மைத் துறை, அட்மா திட்டம், கால்நடை பராமரிப்பு துறை ஆகியன இணைந்து நடத்திய முகாமுக்கு பொன்னமராவதி வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தலைமைவகித்தார். ஊராட்சித் தலைவர் சி. விஜயகுமார் முன்னிலை வகித்தார். பொன்னமராவதி கால்நடை மருத்துவர்

ஜெ. நவநீதகிருஷ்ணன் வரவேற்றார். அட்மா திட்ட ஆலோசனைக் குழு தலைவர் காசி கண்ணப்பன் முகாமை தொடக்கிவைத்து, விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போருக்கு தாது உப்பு கலவை மற்றும் கோ 4 தீவன புல் கரணைகளை இலவசமாக வழங்கினார். முகாமில், வேந்தன்பட்டி, இடையபட்டி, வார்ப்பட்டு, மேலைச்சிவபுரி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல்,

மலடுநீக்கம், குடற்புழு நீக்கம் ஆகிய சிகிச்சைகளை கால்நடை மருத்துவர்கள் ஜெ. நவநீதகிருஷ்ணன், சண்முகநாதன் மற்றும் முதுநிலை கால்நடை மேற்பார்வையாளர் கருப்பையா ஆகியோர் அளித்தனர்.

இதுபோன்ற முகாம்கள் தொடர்ந்து ஏப். 21, 23, 28 ஆகிய தேதிகளில் முறையே பி.உசிலம்பட்டி, அஞ்சுபுளிப்பட்டி, குமாரபட்டி ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது. முகாமுக்கான ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர்கள் தேவி, ராஜூ ஆகியோர் செய்திருந்தனர். பொன்னமராவதியில் மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள் விநியோகம் பொன்னமராவதி வட்டாரத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் இடுபொருள்கள் விநியோகிக்கப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நவீன வேளாண் தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு கொண்டு சேர்ப்பதற்காக வேளாண்மை துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி, பொன்னமராவதி வட்டார விவசாயிகளிடம் சிறுதானிய பயிர்கள் சாகுபடியை ஊக்குவிப்பதற்காக செயல்விளக்க திடல்கள் அமைக்க விரும்பும் விவசாயிகளுக்கு வரகு, சாமை மற்றும் குதிரைவாலி விதைகளும், அதற்கான ரசாயன உரங்களும் மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், தேசிய உணவுப் பாதுகாப்பு குழுமம் மற்றும் தேசிய எண்ணெய்வித்து உற்பத்தி குழுமம் ஆகிய திட்டங்களின் மூலம் 50% மானிய விலையில் நெல் நுண்சத்து உரங்கள், நிலக்கடலை நுண்சத்து உரங்கள் மற்றும் பயறுவகை பயிர்களுக்கும், நிலக்கடலை பயிர்களுக்கும் இடவேண்டிய உயிர் உரங்களும் மானிய விலையில் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

தேசிய உணவுப் பாதுகாப்பு குழுமம் மூலம் வேளாண் கருவிகளான கைத்தெளிப்பான் மற்றும் விசைத்தெளிப்பான் ஆகியவை மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. இதுதவிர, வம்பன் 4

உளுந்து விதைகள், சணப்பு விதைகள் மு-6 நிலக்கடலை விதைகள், பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் உள்ளிட்டவை பொன்னமராவதி வேளாண்மை விரிவாக்க மையத்தில் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருவதால், தேவையான இடுபொருள்களை வாங்கி விவசாயிகள் பயனடைய வேண்டும்.

### தஞ்சையில் நாளை மீன்வளர்ப்பு கருத்தரங்கம்

தஞ்சாவூர் மாவட்ட உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போருக்கான ஒருங்கிணைந்த மீன்வளர்ப்புக் கருத்தரங்கம் வரும் 18-ஆம் தேதி நடைபெறுகிறது.இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்ட அறிக்கை: தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போரை ஒருங்கிணைத்து மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கம், கீழவாசல் அண்ணா திருமண மண்டபத்தில் காலை 10 மணிக்கு நடைபெறுகிறது. இதில் தமிழக வீ்ட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் வேளாண்துறை அமைச்சர் ஆர். வைத்திலிங்கம், மக்களவை உறுப்பினர் கு. பரசுராமன், எம்எல்ஏக்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். ஆகையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள உள்நாட்டு மீனவர்கள் மற்றும் மீன்வளர்ப்போர் இதில் பங்கேற்று பயன்பெறலாம்.

### சாரல் மழை: முந்திரி விவசாயிகள் மகிழ்ச்சி

கோடை வெப்பத்தால் முந்திரிப் பூக்கள் கருகி வந்ததால் கவலை அடைந்த விவசாயிகள், இரு நாள்களாக பெய்து வரும் லேசான சாரல் மழையால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கடலூர் மாவட்டத்தில் கடலூர், பண்ருட்டி மற்றும் விருத்தாசலம் பகுதிகளில் 28,500 ஹெக்டேர் நிலப்பரப்பில் முந்திரிக் காடுகள் உள்ளன. இக்காடுகளில் இருந்து ஆண்டுதோறும் 22,168 மெட்ரிக் டன் முந்திரிக் கொட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதை அடிப்படையாகக் கொண்டு பண்ருட்டி

பகுதியில் பல்வேறு முந்திரி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. மேலும், முந்திரிக் கொட்டைகள் ஏற்றுமதி செய்யப்படுவதன் மூலம் ஆண்டுக்கு கோடிக்கணக்கான ரூபாய் அன்னிய செலாவணி ஈட்டப்படுகிறது.மேலும், முந்திரி சார்பு தொழில் மூலம் (முந்திரி எண்ணெய், புண்ணாக்கு) பல சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இதனால் கிராமப் பகுதியில் ஏராளமான ஆண்களும், பெண்களும் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்புப் பெற்று வருவதுடன், இப்பகுதி பொருளாதார வளர்ச்சி பெற்று வருகிறது.ஆனால் கடந்த பல ஆண்டுகளாகவே வெயில், கனமழை, புயல், கடும் பனிப்பொழிவு உள்ளிட்ட பல்வேறு இயற்கை இடர்பாடுகளின் காரணமாக மகசூல் பாதிக்கப்பட்டதால், முந்திரி விவசாயிகள் சோதனைகளை அனுபவித்து வருகின்றனர். இருப்பினும் பாதகம் இல்லாத அளவுக்கு மகசூல் கிடைத்ததால் இவர்களின் வாழ்வாதாரம் திருப்திகரமாக இருந்து வருகிறது. முந்திரி மற்றும் பலா ஆகியவகளை பயிரிட்டு அதன் மூலம் கிடைக்கும் வருவாயையே முக்கிய வாழ்வாதாரமாகக் கொண்டு இப்பகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். இந்நிலையில், இந்த ஆண்டு முந்திரி மரங்கள் பூவும், பிஞ்சுமாக காட்சி அளிப்பது விவசாயிகளை மகிழ்ச்சி அடையச் செய்தது. ஆனால் வெயிலின் தாக்கத்தால் பூக்கள் கருகியும், பிஞ்சுகள் வதங்கியும் காணப்பட்டதால் விவசாயிகள் கலக்கம் அடைந்தனர். இதனிடையே கடந்த 2 நாள்களாக லேசான மழை ஆங்காங்கே பெய்து வருவது முந்திரி விவசாயிகள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து, முந்திரி விவசாயிகளான காடாம்புலியூர் சரவணன், முத்தாண்டிக்குப்பம் தனசேகரன் ஆகியோர் கூறியதாவது, சாரல் மழை மகிழ்ச்சியைத் தந்தாலும், இதனால் எந்தப் பயனும் இல்லை. இப்போதைய சூழ்நிலையில் பூமியில் தண்ணீர் நிற்கும் அளவுக்கு நல்ல மழை பெய்தால் மட்டுமே முந்திரி, பலா மகசூல் அமோகமாக இருக்கும் என்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

**சேலத்தில் மூன்றாவது நாளாக கோடை மழைவெப்பம் தணிந்ததால் மக்கள் மகிழ்ச்சி**

சேலம்:சேலம் மாவட்டத்தில், மூன்றாவது நாளாக கோடை மழை பெய்தது. தொடர்ந்து மழை பெய்து வருவதால், வெப்பத்தின் தாக்கம் தணிந்துள்ளது. இதனால், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.சேலம் மாவட்டம் முழுவதும், கடந்த மார்ச் மாதம் துவக்கத்தில் இருந்தே கோடை வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. காலை, 8 மணிக்கு மேல் வெளிய வரும் பொதுமக்கள் கடும் பாதிப்புக்குள்ளாகினர். குறிப்பாக, முதியவர்கள், குழந்தைக ளின் பாடு திண்டாட்டமாக இருந்தது. கோடையின் தாக்கம் மார்ச் துவக்கத்திலேயே, 98 டிகிரியில் இருந்து இரண்டு வாரத்தில், 105 டிகிரியை தொட்டது. இதனால், பொதுமக்கள் கலக்கம் அடைந்தனர். வெயிலின் தாக்கம் அதிகரித்தது, ரோட்டோரத்தில் இளநீர், தர்பூசணி, நுங்கு, ஜுஸ் கடைகள் ஆகியவை அதிகரித்தது.ஏப்ரல் முதல் வாரம் வரை, கோடையின் தாக்கம் குறையவில்லை. 100 டிகிரிக்கு குறையாமல், வெயிலின் தாக்கம் இருந்தது. பொதுமக்கள் கோடை மழையை எதிர்பார்த்தனர். கடந்த மூன்று நாட்களாக சேலம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால், கோடையின் தாக்கம் குறைந்துள்ளது. கடந்த, ஏப்., 5ம் தேதி கோடையின் தாக்கம், 103 டிகிரியாக இருந்தது. சுட்டெரித்த வெயிலிலால், பொதுமக்கள் முகம் சுழித்தனர்.நேற்று முன்தினம், 94.3 டிகிரியாக இருந்த கோடையின் அளவு, நேற்று, 91.8 டிகிரியாக இருந்தது. கடந்த ஒரு வாரமாக கோடையின் தாக்கம், 100 டிகிரிக்கு குறைவாக பதிவாகி வருகிறது.பகல் நேரத்தில் கோடையின் தாக்கம் குறைந்து, இரவு நேரத்தில் மழை பெய்து வருவதால், குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவுகிறது. கோடையில் கடும் சிரமத்தில் தவித்து வந்த

பொதுமக்களுக்கு, மூன்றாவது நாளாக கோடை மழை பெய்து ஆறுதலை தந்துள்ளது.நேற்று இரவில் இருந்து அதிகாலை வரை, லேசான தூரலுடன், சேலம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. மழையால் சேலத்தில் பெரிய அளவில் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. பல இடங்களில், ரோடுகளில் மட்டும் மழைநீர் தேங்கி நிற்கிறது. அதிகபட்சமாக இடைப்பாடியில், 38 மி.மீ., மழை பெய்ததால், ஒரு சில இடங்களில் விவசாய பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டது.சேலம் மாவட்டத்தில் பதிவான மழை விவரம் வருமாறு:சேலம் 13.7 மி.மீ., வாழப்பாடி 2.4, ஓமலூர் 10, இடைப்பாடி 38, தம்மம்பட்டி 10.2 , சங்ககிரி 14, மேட்டூர் 14.2, வீரகனூர் 3, ஏற்காடு 2.2 மி.மீ.,

நாமக்கல்:"ஏப்ரல், 24ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடக்கிறது. அதில், விவசாயம் தொடர்பான பிரச்னைகளை தெரிவித்து பயன்பெறலாம்' என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்துள்ளார்.
அவர் வெளியிட்ட அறிக்கை:ஏப்ரல் மாதத்துக்கான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், ஏப்ரல், 24ம் தேதி, காலை, 10.30 மணிக்கு, நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு, விவசாயம் தொடர்பான பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்வதுடன், விவசாயம் தொடர்பான குறைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை தெரிவித்து உரிய நிவாரணம் பெறலாம்.பட்டா மாறுதல், பாதை தகராறு உள்ளிட்ட அனைத்து நிலங்கள் தொடர்பான பிரச்னைகளுக்கென, ஏப்ரல், 23ம் தேதி காலை, 10.30 மணிக்கு தனிக்கூட்டம் நடக்கிறது. மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கும் இக்கூட்டத்தில், விவசாயிகள் நிலம் தொடர்பான பிரச்னைகளை தெரிவித்து பயன்பெறலாம்.ஏப்ரல், 24ம் தேதி நடக்கும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், விவசாய தொழில் சம்பந்தப்பட்ட பிரச்னைகளை தெரிவித்து விவசாயிகள் பயன்பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கி.கிரியில் தொடரும் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

கிருஷ்ணகிரி:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தொடர்ந்து, நான்காவது நாளாக, மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில், அக்னி நட்சத்திரம் தொடங்கும் முன்பாகவே, கடும் வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்தது. இந்நிலையில் கடந்த, நான்கு நாட்களாக, காலை வெயிலின் தாக்கம் சற்று குறைவாக காணப்பட்டதுடன், மாலை மற்றும் இரவு நேரங்களில், கன மழை பெய்து வருகிறது.தொடர் மழை காரணமாக, நீண்ட நாட்களுக்கு பிறகு கிருஷ்ணகிரி மாவட்டத்தில், பல இடங்களில் குளிர்ந்த காற்று வீசி வருகிறது. மேலும், தொடர் மழையால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நேற்று காலை நிலவரப்படி மாவட்டத்தில், அதிக பட்சமாக கிருஷ்ணகிரி, 30.2 மில்லி மீட்டர் மழை அளவு பதிவானது.அதை தொடர்ந்து, தளி, 26 மி.மீ., சூளகிரி,17, தேன்கனிக்கோட்டை, 7, நெடுங்கல், 6.4, அஞ்செட்டி, 5.3, பெணுகொண்டாபுரம், 3.2, பாரூர், 3, போச்சம்பள்ளி 2.6, மி.மீட்டர் மழை பெய்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**செடி ஒன்று... மலர் இரண்டு; சுற்றுலா பயணிகள் பிரமிப்பு**

கூடலூர் : கூடலூர் சாலையோரத்தில், ஒரே செடியில் இரு வண்ணங்களில் பூத்துள்ள மலர்கள், சுற்றுலா பயணிகளை கவர்கின்றன.

நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகம் பகுதியில், வறட்சி காலத்தில், சாலை ஓரங்களில் இயற்கையாக ஏராளமான பூக்கள் பூக்கின்றன. இதன் அருகில் உள்ள, கூடலூர் பகுதியிலும், ஆங்காங்கே இத்தகைய செடிகள் காணப்படுகின்றன.குறிப்பாக, மரப்பாலம் பகுதியில், சாலை ஓரத்தில் ஒரே செடியில், இரு வண்ணங்களில் கொத்து கொத்தாக பூத்துள்ள மலர்கள், உள்ளூர் மக்கள் மட்டுமின்றி, அவ்வழியாக செல்லும் சுற்றுலா பயணிகளையும் கவர்ந்து வருகிறது.

**மீன் வளர்ப்போர் பெருவிழாவில் தகவல் மீன் வளத்துறையில் 190 பேருக்கு உதவி**

திருச்சி: ""திருச்சி மாவட்டத்தில் மீன் வளத்துறை சார்பில், பல்வேறு நலத்திட்ட உதவிகள், 190 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது" என, டி.ஆர்.ஓ., தர்ப்பகராஜ்தெரிவித்தார்.திருச்சி மாவட்ட மீன்வளத்துறை சார்பில், மீன் வளர்ப்போர் பெருவிழா திருச்சியில் நடந்தது.விழாவில், மீன் வளர்ப்போருக்கான கையேட்டை, டி.ஆர்.ஓ., தர்ப்பகராஜ் வெளியிட்டு பேசியதாவது:திருச்சி மாவட்டத்தில், 899 மீனவர்களுக்கு நலவாரிய அட்டை வழங்கப்பட்டுள்ளது. உள்நாட்டு மீனவர்கள் பயன்பெறும் வகையில், மீனவர் சங்கத்தில் உறுப்பினராக உள்ள, 105 பேருக்கு கல்வி உதவி தொகையாக, ஒரு லட்சத்து, 76 ஆயிரம் ரூபாயும், திருமண உதவி தொகையாக, 38 பேருக்கு, ஒரு லட்சத்து, 44 ரூபாய் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள் என, 190 பேருக்கு, 10 லட்சத்து, 56 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.மேலும், பண்ணை குட்டை மீன் வளர்ப்பு திட்டத்தில் இதுவரை, 255 பண்ணைகுட்டைகளில், மீன் வளர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 900 சதுர மீட்டர் பரப்பளவு உள்ள ஒரு பண்ணை குட்டைக்கு, 17 ஆயிரத்து, 500 ரூபாய் மான்யமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தில் இதுவரை, 11 ஆயிரத்து, 565 டன் மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளது.தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் சார்பில், பண்ணை குட்டைகளில் முதல் முறையாக கிஃப்ட் திலேப்பியா என்ற ரக மீன் குஞ்சுகளும், அதற்கான தீவனமும், 44 பயனாளிகளுக்கு, ஒரு லட்சத்து, 10 ஆயிரம் ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மீன்பிடி தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு, 50 சதவீத மான்யத்தில் மீன்பிடி வலைகள் வழங்கப்பட்டுள்ளது, என்றார்.சூரக்கோட்டை மீன்வள பயிற்சி நிலைய இணை பேராசிரியர் டாக்டர் செந்தில் குமார், இமாலயன் அக்டாடெக் நிறுவனத்தின் சார்பில் சுரேஷ்குமார், தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி, ஆராய்ச்சி நிலைய பேரா சிரியர் சாந்தகுமார், மத்திய உவர்நீர் ஆராய்ச்சி நிலைய முதன்மை விஞ்ஞானி டாக்டர் டிபுரால், மீன்வள துறை உதவி இயக்குநர் உமா, துணை இயக்குநர் ஷர்மிளா உள்பட பலர் விழாவில் பங்கேற்றனர்.

**வாழைத்தார், வெற்றிலை விலை வீழ்ச்சிவேலாயுதம்பாளையம் விவசாயிகள் கவலை**

வேலாயுதம்பாளையம்:கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், சேமங்கி, முத்தனூர், நடையனூர், கோம்புப்பாளையம், திருக்காடு துறை, என் புகழுர், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக் கணக்கான ஏக்கரில், வாழை மற்றும் வெற்றிலை பயிரிட்டுள்ளனர்.அறுவடை செய்யப்படும் வாழைத்தார் உள்ளுர் பகுதிகளில் உள்ள கடைகளுக்கும், வியாபரிகளுக்கும் விற்பனை செய்கின்றனர். சில வியாபாரிகள் வாழைத்தோட்டத்தை குத்தகைக்கு எடுத்துக் கொள்கின்றனர். வாழைத் தோட்டத்தில் விளையும் வாழைத்தார்களை, விவசாயிகளிடமிருந்து வியாபரிகள் வாங்கி, லாரிகள் மூலம் திண்டுக்கல், மதுரை, திருச்சி, கரூர், ஈரோடு, கோவை நாமக்கல், நீலகிரி, சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும், ஆந்திரா, கேரளா, கர்நாடகா, உத்திரபிரதேசம் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கின்றனர்.கடந்த வாரத்தில் பூவன் வாழைத்தார், 450 ரூபாய்க்கும், ரஸ்தாளி வாழைத்தார், 350க்கும், கற்பூரவள்ளி, 300க்கும், பச்சை நாடன், 350க்கும், மொந்தன் வாழைத்தார், 300 ரூபாய்க்கும் வியாபாரிகள் வாங்கிச்சென்றனர்.நேற்று பூவன் வழைத்தார், 250 ரூபாய்க்கும், ரஸ்தாளி வாழைத்தார், 200க்கும், கற்பூரவள்ளி வாழைத்தார், 200க்கும், பச்சை நாடன், 250க்கும், மொந்தன் வாழை, 400 ரூபாய்க்கும் வியாபாரிகள் வாங்கிச் சென்றனர்.வெற்றிலை, 104 கவுளி கொண்ட ஒரு சுமை, 3,700 ரூபாய்க்கும், முதிகால் வெள்ளக்கொடி வெற்றிலை, 2,000க்கும், இளங்கால் கற்பூரி வெற்றிலை, 2,000க்கும், முதிகால் கற்பூரி வெற்றிலை, 1,000க்கும் விற்பனையானது. நேற்று, இளங்கால் வெள்ளக் கொடி வெற்றிலை, ஒரு சுமை, 3,000க்கும், முதிகால் வெள்ளக்கொடி, 1,500க்கும், இளங்கால் கற்பூரி வெற்றிலை, 1,500க்கும், முதிகால் கற்பூரி வெற்றிலை, 1, 700க்கும் விற்பனையானது.உற்பத்தி அதிகரிப்பின் காரணமாகவும் விசேஷ நாட்கள் இல்லாததாலும், வெற்றிலை மற்றும் வாழை விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**கரூர் மாவட்டத்தில் பலத்த மழைஅரவக்குறிச்சியில் 81 மி.மீ., பதிவு**

கரூர்:கரூர் மாவட்டத்தில், நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். அதிகபட்சமாக, அரவக்குறிச்சியில், 81 மி.மீ., மழை அளவு பதிவாகி உள்ளது.கரூர் மாவட்டத்தில், கடந்த சில வாரங்களாக கடுமையான வெயில் தாக்கம் இருந்தது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக பெய்யும் மழை காரணமாக வெப்பம் தணிந்துள்ளது. மாயனூர் கட்டளை வாய்க்கால் பாசனத்தில் வாழை, மஞ்சள் போன்றவை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மழை காரணமாக லாலாபேட்டை, மாயனூர் உள்ளிட்ட இடங்களில் வாழை கீழே சாய்ந்து விட்டது. அரவக்குறிச்சி பகுதியில் மானாவாரியில் சாகுபடி செய்யப்பட்ட எள் பயிர் சேதமடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கரூர் மாவட்டத்தில் மொத்தம், 405 மி.மீ., மழை பெய்துள்ளது.அரவக்குறிச்சியில், 81 மி.மீ., க.பரமத்தியில், 18.80, குளித்தலையில், 1.30, மாயனூரில், 5.40, கரூரில், 48, அணைபாளையத்தில், 59.20, தோகைமலையில், 5.30, பஞ்சபட்டியில், 22, பாலவிடுதியில், 72.20, கடவூரில், 40.60, கிருஷ்ணராயபுரத்தில், 6, மைலம்பட்டியில் 45.20 மி.மீ., மழையும் பதிவானது.

கும்பகோணம்:கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்கத் தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். துணைத் தலைவர் செந்தில்குமார் வரவேற்றார். செயலாளர் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில், வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் சங்கத்திற்கு, 25 லட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுவது, வங்கிக்கு, ஐந்து கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தியதை அங்கீகரிப்பது, இதுவரை, 94 லட்சம் பயிர் கடன்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் நிலுவை கடன்களை சரியாக செலுத்தியவர்களுக்கு, உடனே கடன் வழங்குவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.இயக்குனர் சதீஷ்குமார் நன்றி கூறினார்

## வேளாண் கூட்டுறவு சங்கநிர்வாகக்குழு கூட்டம்

கும்பகோணம்:கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க நிர்வாகக்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்கத் தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். துணைத் தலைவர் செந்தில்குமார் வரவேற்றார். செயலாளர் வெங்கடேசன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில், வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் சங்கத்திற்கு, 25 லட்சம் செலவில் புதிய கட்டிடம் கட்டுவது, வங்கிக்கு, ஐந்து கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தியதை அங்கீகரிப்பது, இதுவரை, 94 லட்சம் பயிர் கடன்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் நிலுவை கடன்களை சரியாக செலுத்தியவர்களுக்கு, உடனே கடன் வழங்குவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.இயக்குனர் சதீஷ்குமார் நன்றி கூறினார்.

## கொட்டி தீர்த்த மழை: தேவகோட்டையில் 100.2 மி.மீ.,

சிவகங்கை : மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முழுவதும் கொட்டி தீர்த்த மழையால் நடவு செய்த பருத்தி, பயறு வகை தப்பியதாக விவசாய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாவட்டத்தில் மானாவாரி விவசாயம் அதிகம் நடக்கிறது.வானம் பார்த்த பூமியான சிவகங்கையில், ஆண்டு தோறும் பருவ மழையை நம்பியை விவசாயம் நடக்கிறது. கோடை வெயிலின் தாக்கத்தால் அவ்வப்போது பெய்த தூறல் மழை மூலம் உழவு பணி மேற்கொண்ட விவசாயிகள், மானாவாரி நிலத்தில் பருத்தி, பயறு வகை பயிர்களை நடவு செய்திருந்தனர். சித்திரை பிறந்தும் வெயிலின் தாக்கம் அதிகரித்ததால்,விவசாயிகள் கவலையில் இருந்தனர்.நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை தொடர்ந்து மழை பெய்தது. கொட்டிய மழை: நேற்று காலை 8 மணி நிலவரப்படி, தேவகோட்டையில் அதிக பட்சமாக 100. 4 மி.மீ., மழை பதிவானது. இதற்கு அடுத்து சிவகங்கையில் 36 மி.மீ., மழை பதிவானது.

ராமநாதபுரம் : விசைப்படகுகளுக்கு மீன்பிடி தடைக்காலம் துவங்கி விட்டதால், நாட்டுப்படகுகளில் சென்று மீன்பிடிப்பதில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மீனவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கிழக்கு கடல் பகுதியில் மீன் வளத்தை பாதுகாக்க, கடந்த ஏப்., 15 முதல் வரும் மே 29 வரை 45 நாட்களுக்கு விசைப் படகுகள், இழுவலை படகுகளில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையோரங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. கட்டுமரங்கள், நாட்டுப்படகுகளில் மீனவர்கள் 3 நாட்டிக்கல் மைல் தூரத்திற்குள் மட்டுமே மீன்பிடிக்க சென்று வருகின்றனர்.

இம்முறையில் மீன்பிடிப்பதால், இந்திய கடல் எல்லை தாண்டி செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. இலங்கை கடற்படை தாக்குதலுக்கு ஆளாக வேண்டிய நிலை வராது. மேலும், மீன் வரத்து குறைவாக இருக்கும் என்பதால், நாட்டுப் படகுகளில் பிடிக்கப்பட்டு, மார்க்கெட்டு களுக்கு கொண்டு வரப்படும் குறைந்தளவு மீன்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதாலும், தமிழகம் முழுவதும் உள்ள 34 ஆயிரம் கட்டுமரங்கள், 21ஆயிரத்து 400 நாட்டுப்படகுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தீவிர மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு சில பகுதிகளில் நாட்டுப்படகு மீனவர்கள் தள்ளுவலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்க முயற்சிப்பதை மீன்வளத்துறை அதிகாரிகள் தடுக்க வேண்டும், என விசைப்படகு மீனவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

ராமநாதபுரம் : விசைப்படகுகளுக்கு மீன்பிடி தடைக்காலம் துவங்கி விட்டதால், நாட்டுப்படகுகளில் சென்று மீன்பிடிப்பதில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மீனவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கிழக்கு கடல் பகுதியில் மீன் வளத்தை பாதுகாக்க, கடந்த ஏப்., 15 முதல் வரும் மே 29 வரை 45 நாட்களுக்கு விசைப் படகுகள், இழுவலை படகுகளில் மீன்பிடிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையோரங்களில் நிறுத்தப்பட்டுள்ளன. கட்டுமரங்கள், நாட்டுப்படகுகளில் மீனவர்கள் 3

நாட்டிக்கல் மைல் தூரத்திற்குள் மட்டுமே மீன்பிடிக்க சென்று வருகின்றனர்.

இம்முறையில் மீன்பிடிப்பதால், இந்திய கடல் எல்லை தாண்டி செல்ல வேண்டிய அவசியம் ஏற்படாது. இலங்கை கடற்படை தாக்குதலுக்கு ஆளாக வேண்டிய நிலை வராது. மேலும், மீன் வரத்து குறைவாக இருக்கும் என்பதால், நாட்டுப் படகுகளில் பிடிக்கப்பட்டு, மார்க்கெட்டு களுக்கு கொண்டு வரப்படும் குறைந்தளவு மீன்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதாலும், தமிழகம் முழுவதும் உள்ள 34 ஆயிரம் கட்டுமரங்கள், 21ஆயிரத்து 400 நாட்டுப்படகுகளில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் தீவிர மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர்.

ஒரு சில பகுதிகளில் நாட்டுப்படகு மீனவர்கள் தள்ளுவலைகளை பயன்படுத்தி மீன்பிடிக்க முயற்சிப்பதை மீன்வளத்துறை அதிகாரிகள் தடுக்க வேண்டும், என விசைப்படகு மீனவர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

**ஒரு செடியில் இரு வண்ண மலர்சுற்றுலா பயணிகள் பிரமிப்பு**

கூடலூார்:நீலகிரி மாவட்டம், கூடலூர் சாலையோரத்தில், ஒரே செடியில் இரு வண்ணங்களில் பூத்துள்ள மலர்கள், சுற்றுலா பயணிகளை கவர்கின்றன.நீலகிரி மாவட்டம், முதுமலை புலிகள் காப்பகம் பகுதியில், வறட்சி காலத்தில், சாலை ஓரம் ஏராளமான பூக்கள் பூக்கின்றன. இதன் அருகே, கூடலூர் பகுதி யிலும், இத்தகைய செடிகள் உள்ளன. குறிப்பாக, மரப்பாலம் பகுதியில், சாலை ஓரத்தில் ஒரே செடியில், இரு வண்ணங்களில் கொத்து கொத்தாக பூத்துள்ள மலர்கள், உள்ளூர்வாசிகளையும், சுற்றுலா பயணிகளையும் கவர்ந்துள்ளன.

**தக்காளி தோலை ஒதுக்காதீங்க 'கேன்சரை' கட்டுப்படுத்துமாம்**

காந்திகிராமம்:'கேன்சரை' கட்டுப்படுத்தும் தக்காளி தோலை ஒதுக்காமல் உண்ண வேண்டுமென, காந்திகிராம பல்கலை அறிவுறுத்தியுள்ளது.திண்டுக்கல் மாவட்டத்தில் 5 ஆயிரம் ஏக்கரில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு பி.கே.எம்.,1, கோ 3, இந்தோ அமெரிக்கன் ஹைபிரிட் ரகம் பயிரிடப்படுகிறது. தக்காளி குறித்து காந்திகிராம பல்கலை வேளாண்மை டீன் கணேஷ் வழிகாட்டுதலில் ஆராய்ச்சியாளர் சித்திக் ஆய்வு மேற்கொண்டார். தரம் பிரிக்காதது,

பதப்படுத்த வசதி இல்லாதது போன்றவற்றால் 30 சதவீதம் தக்காளி வீணாகிறது.

பெரும்பாலானோர் உணவில் உள்ள தக்காளி தோலை உண்ணாமல் துாக்கி எறிகின்றனர். ஜூஸ், சாஸ் தொழிற்சாலைகளில் தக்காளி தோல் வீணாகின்றன. தோலை மதிப்பு கூட்டு பொருளாக மாற்றும் தொழிற்சாலைகள் இந்தியாவில் இல்லாததும் ஆய்வில் தெரியவந்துள்ளது.டீன் கணேஷ் கூறியதாவது: உணவில் உள்ள தக்காளி தோலை ஒதுக்காமல் உண்ண வேண்டும். தக்காளி தோலில் 4 சதவீதம் 'லைக்கோபின்' இருக்கும். இது ரத்தத்தில் ஆக்ஸிஜனை கட்டுப்படுத்தும். 'கேன்சர்' நோயை தடுக்கும். ஒரு கிலோ தக்காளியில் 50 கிராம் தோல் கிடைக்கும். 100 கிராம் தோலில் 4 கிராம் 'லைக்கோபின்' இருக்கும்.

தக்காளியில் இருந்து தெளிப்பு முறை உலர்த்தல் முறையில் தோலை பிரித்து பவுடராக்கலாம். மில்லிகிராம் அளவில் பவுடரை உணவுபொருட்களில் பயன்படுத்தினால் போதும்.

இதனால் உணவு பொருட்களின் சுவை மாறாது. விவசாயிகள் கூட்டாக சேர்ந்து தோல் பவுடர் தொழிற்சாலை ஆரம்பிக்கலாம், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**குமரியில் சாரல் மழை நீடிப்பு**

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக சாரல் மழை பெய்து வருகிறது. மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில் நேற்றும் இடி மின்னலுடன் ஒரு சில இடங்களில் சாரல் மழை பெய்தது. அதிகபட்சமாக பாலமோரில் 31.5 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறையில் 16.4 மி.மீ மழை பெய்தது. மாவட்டத்தில் நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 28.70 அடியாக இருந்தது. அணைக்கு 211 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம்

60.70 அடியாக இருந்தது. அணைக்கு 173 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. சிற்றார்&1ல் 7.60 அடியாக நீர்மட்டம் காணப்படுகிறது. அணைக்கு 20 கன அடி தண்ணீர் வரத்து இருந்தது. சிற்றார்&2ல் 7.71 அடியாக நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 33 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. பொய்கையில் 7.90 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 51.35 அடியாக நீர்மட்டம் காணப்படுகிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மீன்பிடி தடைக்காலத்தால் மீன்கள் விலை கடுமையாக உயர்வு**



சென்னை, தற்போது மீன்பிடி தடைக்காலம் அமலில் உள்ளதால் சென்னையில் மீன்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

<u>மீன்பிடி தடைக்காலம்</u>

மீன்களின் இனப்பெருக்கத்திற்காக ஏப்ரல் 15–ந்தேதி முதல் மே 30–ந்தேதி வரையிலான 45 நாட்கள் மீன்பிடி தடைக்காலமாக மத்திய, மாநில அரசுகள் அறிவித்துள்ளது. இதன்படி நேற்று முன்தினம் நள்ளிரவு முதல்

தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் மீன்பிடி தடைக்காலம் அமலுக்கு வந்தது.

சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுக பகுதியில் 2 ஆயிரம் பைபர் படகுகள், ஆயிரம் விசை படகுகள் என மொத்தம் 3 ஆயிரம் படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. படகுகளுக்கு வர்ணம் தீட்டுதல், என்ஜின் பழுதுபார்த்தல், வலைகளை சரிசெய்தல் போன்ற பணிகளை தொடங்கியுள்ளனர்.

<u>மீன் விலை உயர்வு</u>

காசிமேடு துறைமுக பகுதியில் ஏற்கனவே பிடித்து வைத்திருந்த மத்தி, நெத்திலி, காரப்பொடி, காலா உள்பட பல்வேறு வகையான மீன்களை கருவாடாக உலர்த்தும் பணியில் மீனவர்கள் ஈடுபட்டுள்ளனர். 'ஐஸ்' வைத்து பாதுகாத்து வந்த மீன்களும் தற்போது விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இவை இன்னும் ஓரிரு தினங்கள் வரை விற்பனை செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.அதன்பின்னர் மராட்டியம், கர்நாடகா, கேரளா, கோவா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு மீன் இறக்குமதி செய்யப்படும். தடைக்காலம் காரணமாக மீன்களின் விலை கடந்த வாரத்தோடு ஒப்பிடுகையில் கடுமையாக உயர்ந்துள்ளது. வரும் நாட்களில் மேலும் விலை உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.தடைக்கு பொருந்தாத கட்டுமரம் மற்றும் சிறிய படகுகளில் (10 குதிரை திறனுக்கு குறைவான என்ஜின்) மீனவர்கள் சென்னை கடலோரங்களில் குறைவான தூரத்திற்கு சென்று மீன் பிடித்து வருகின்றனர். இவர்களது வலைகளில் பெரும்பாலும் மத்தி மீன்கள் கிடைக்கிறது.

<u>நிதியை உயர்த்தவேண்டும்</u>

அகில இந்திய மீனவர் சங்கத்தின் செய்தித் தொடர்பாளர் நாஞ்சில் பி.ரவி கூறியதாவது:– தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் அமலில் இருப்பதால் 75 லட்சம் மீனவர்கள் வேலைவாய்ப்பினை இழக்கிறார்கள். மீனவ குடும்பங்களுக்கு அரசு சார்பில் வழங்கப்படும் நிதியுதவியை ரூ.2

ஆயிரத்தில் இருந்து ரூ.4,500 ஆக அதிகரிக்க வேண்டும். அலைகள் சீற்றத்துடன் காணப்படும் அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் மீன்பிடி தடைக்காலத்தை அமல்படுத்த வேண்டும். இந்த காலக்கட்டத்தில் தான் மீன்களின் இனப்பெருக்கமும் அதிகமாக இருக்கும்.சென்னை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் 65–க்கும் மேற்பட்ட பிரதான மீன் மார்க்கெட்டுகள் உள்ளன. மீன்பிடி தடைக்காலத்தில் இந்த மார்க்கெட்டுகளுக்கு தினமும் சுமார் 300 டன் மீன்கள் வெளிமாநிலங்களில் இருந்து இறக்குமதி ஆகும் என்று எதிர்பார்க்கிறோம்.இவ்வாறு அவர் கூறினார்.

**அழகாபுரி குடகனாறு அணையில் கூடுதலாக சேரும் தண்ணீர் தானாக வெளியேறும் திட்டப்பணிகள் ரூ.3¼ கோடி மதிப்பில் நடக்கிறது**



வேடசந்தூர், அழகாபுரி குடகனாறு அணையில் மழைக்காலங்களில் கூடுதலாக சேரும் தண்ணீர் தானாக வெளியேறும் திட்டப்பணிகள் ரூ.3¼ கோடி மதிப்பில் நடந்து வருகிறது.

<u>விவசாய நிலங்கள்</u>

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே உள்ளது அழகாபுரி குடகனாறு அணை. இங்குள்ள மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்தால் சந்தனவர்த்தினி ஆறு, வரட்டாறு, மான்கோம்பை ஆறு, மாங்கரை ஆறுகளில் இருந்தும், ஆத்தூர் காமராஜர் அணையில் இருந்தும் வரும் மழை வெள்ளம் குடகனாறு வழியாக அணைககு வருகிறது.27 அடி உயரமுள்ள இந்த அணையின் மூலம் திண்டுககல் மாவட்டத்தில் 3,663 ஏககர் விவசாய நிலங்களும், கரூர் மாவட்டத்தில்

5,337 ஏககர் விவசாய நிலங்களும் பாசன வசதி பெறுகிறது. மேலும் அணையை சுற்றியுள்ள விவசாய கிணறுகளின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது.இதற்கிடையே கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையின்போது அணைக்கு தண்ணீர் வரத்து அதிகமாக இருந்தது. இதனால் அணையில் 16 அடி உயரம் வரை நீர் தேக்கி வைக்கப்பட்டது. கடந்த 5 மாதங்களாக அணையில் இருந்த தண்ணீர் பயன்பாட்டுக்கு திறந்து விடப்பட்ட நிலையில், தற்போது 12 அடி உயரத்திற்கு மட்டுமே தண்ணீர் இருப்பு உள்ளது.

<u>தடுப்புச்சுவர்</u>

இந்நிலையில் இந்த அணையினை புனரமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக ரூ.3¼ கோடி மதிப்பில் திட்டம் தயாரிக்கப்பட்டது. இதன்படி மழை காலங்களில் அணைக்கு அதிகப்படியான வெள்ளம் வந்தால், கூடுதல் நீர் எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் தானாக வெளியேறும் வகையில் திட்டம் தயாரிக்கப்பட்டது.இதையடுத்து அந்த பணிகள் தொடங்கி விரைவாக நடந்து வருகிறது. தற்போது அணையின் மேற்குப்பகுதியில் 250 மீட்டர் தூரத்திற்கு கரைகள் அகற்றப்பட்டுள்ளது. மேலும், அதிகப்படியாக சேரும் நீர் வெளியேறும்போது அணையின் முன்பாக உள்ள மற்றொரு கரைப்பகுதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சுமார் 3 அடி உயரம் வரை தடுப்புச்சுவர் கட்டப்பட்டு வருகிறது. இந்த பணிகள் விரைவில் முடிக்கப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**மீன்பிடி தடைகாலங்களில் மீனவர்களுக்கு ரூ.10 ஆயிரம் நிவாரண தொகை வழங்க கோரிக்கை**



கடலூர்முதுநகர்,

மீன்பிடி தடைக்காலங்களில் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண தொகையை உயர்த்தி ரூ.10 ஆயிரமாக வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஆலோசனை கூட்டம்

கடலூர் மீன்பிடி துறைமுகத்தில் சுமார் 20 மீனவ கிராம பிரதிநிதிகள் ஆலோசனை கூட்டம் நேற்று நடைபெற்றது. இதற்கு தேவனாம்பட்டினம் மீனவ கிராம பிரதிநிதி கருணாநிதி தலைமை தாங்கினார். கூட்டத்தில் சோனாங்குப்பம், சிங்காரத்தோப்பு, அக்கரைக்கோரி, ராசப்பேட்டை, சித்திரைபேட்டை, சொத்திக்குப்பம், மாலுமியார்பேட்டை மற்றும் புதுவை மாநிலம் நரம்பை, நல்லபாடு, மூர்த்திகுப்பம் உள்ளிட்ட மீனவ கிராமங்களை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் மீன்பிடி தடைக்காலம், மீனவர்களின் நலம், மீன்பிடிக்கும் போது பயன்படுத்தும் வலைகள் குறித்து கலந்தாலோசனை நடைபெற்றது. இதில் நிறைவேற்ற தீர்மானங்களின் விவரம் வருமாறு:–

சுத்துவலை

மீன்பிடி தடைக்காலத்தில் பைபர் படகில் சென்று துறைமுகம் அருகே உள்ள கடல்பகுதியில் மீனவர்கள் மீன்பிடிக்கும் போது, சிறிய மத்தி மீன்களை பிடிக்கக்கூடாது. மேலும் சுத்துவலை பயன்படுத்தக்கூடாது. இதுதவிர சிறிய படகுகளில் பெரிய இழுவை வலைகளை பயன்படுத்தக்கூடாது. தற்போது மீனவர்களுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு மீன்பிடி தடைகாலத்தில் வழங்கப்படும் நிவாரண உதவி ரூ.2 ஆயிரத்தை உயர்த்தி ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும்.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

61 நாள் தடைக்காலம்

புதுவை சேர்ந்த மீனவர் ஒருவர் கூறுகையில், மத்திய அரசு தற்போது 45 நாட்கள் மீன் தடைக்காலத்தை 61 நாட்களாக அதிகரித்து உள்ளது.

இதனை புதுவை அரசு அமல்படுத்தியுள்ளது. இதனால் புதுவை மீனவர்கள் பாதிப்பு அடைவார்கள். எனவே, தமிழகத்தை போல மீன்பிடி தடைகாலத்தை 45 நாட்களாக இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த நிலை: தமிழ்நாட்டில் இன்று மழை பெய்ய வாய்ப்பு வானிலை மையம் தகவல்**




சென்னை,

தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் இன்று (வெள்ளிக்கிழமை) பெரும்பாலான இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.கோடையில் மழை தமிழ்நாட்டில் கடந்த ஒரு மாதமாக வெயிலின் தன்மை கடுமையாக இருந்தது. வடமாவட்டங்களில் உள்ள குளங்கள், ஏரிகள் வறண்டு போய் உள்ளன. இந்த நிலையில் கடந்த 4 நாட்களாக வங்கக்கடல் காற்றும், அரபிக்கடல் காற்றும் சேர்ந்து சாதமாக வீசுவதால் தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்துவருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்த நிலையில் தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த

காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது.இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

இன்றும் மழை பெய்யும்தென்மேற்கு வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி உள்ளது. மேலும் லட்சத்தீவுக்கு மேல் மேலடுக்கில் சுழற்சி உள்ளது. இப்படி 2 காரணங்களால் தமிழ்நாட்டில் பெரும்பாலான இடங்களில் இன்றும் (வெள்ளிக்கிழமை) மழை பெய்யும். உள்மாவட்டங்களில் சில இடங்களில் கனமழை பெய்யும். இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் பெய்தமழை அளவு வருமாறு:-

மழைஅளவு

பெரிய குளம் 15 செ.மீ., சென்னை தரமணி 12 செ.மீ., தாராபுரம், அரண்மனைப்புதூர் தலா 11 செ.மீ., சென்னை விமானநிலையம், திருமங்கலம், தேவகோட்டை, ஈரோடு தலா 10 செ.மீ., குமாரப்பாளையம், பவானி, காமாட்சிபுரம் தலா 8 செ.மீ., ஆர்.எஸ்.மங்கலம், பழனி, அரவாக்குறிச்சி, தென்காசி தலா 8 செ.மீ., அண்ணா பல்கலைக்கழகம், மணமேல்குடி, பெண்ணாகரம், ஆண்டிப்பட்டி தலா 7 செ.மீ. மழை பெய்துள்ளது.

**மார்த்தாண்டத்தில் வீட்டுத்தோட்ட பயிற்சி முகாம்**




மார்த்தாண்டம் ஒய்.டபிள்யூ. சி.ஏ. வளாகத்தில் ஓராண்டு கால வீட்டுத்தோட்ட பயிற்சி முகாம் நிறைவு விழா நடந்தது. விழாவுக்கு பத்மராணி தலைமை தாங்கினார். கிரீன் அக்ரி கிளப் தலைவி சாந்தி முன்னிலை வகித்தார். ஜாக்குலின் வரவேற்று பேசினார். ஹெலன்

ஆண்டறிக்கை படித்தார். நிகழ்ச்சியில், தேசிய பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜோபிரகாஷ், ஓய்வு பெற்ற வேளாண்மை அதிகாரி ராஜகுமார், கிரேஸ் கல்வி நிறுவன தாளாளர் கீதாபான்ஸ், பிரிகேடியர் சந்திரா ஆகியோர் வீட்டுத் தோட்டத்தின் அவசியம் குறித்து பேசினர். தொடர்ந்து, பியூலா, பிரமிளா, கஸ்தூரி போன்றவர்கள் தங்களின் வீட்டுத்தோட்டம் அனுபவங்கள் குறித்து பேசினர். பயிற்சியில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு கிறிஸ்தவ கல்வியியல் கல்லூரி முதல்வர் பியூலா ஜெயந்தி பரிசு வழங்கினார். முடிவில், பிரேமா ஜாண் நன்றி கூறினார்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 3 காசுகள் உயர்வு 243 காசுகளாக நிர்ணயம்**



நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 240 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 3 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 243 காசுகளாக உயர்ந்து உள்ளது.பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–270, ஐதராபாத்–228, விஜயவாடா, தனுகு–224, பார்வாலா–230, மும்பை–268, மைசூர்–260, பெங்களூரு–255, கொல்கத்தா–265, டெல்லி–250. முட்டைக்கோழி கிலோ ரூ.43–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று நடந்த கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.3 உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டைக்கோழி விலை கிலோ ரூ.46 ஆக உயர்ந்து உள்ளது.

கறிக்கோழி கிலோ ரூ.89–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

**மசினகுடியில், பெண்களுக்கு இயற்கை வேளாண்மை குறித்த பயிற்சி**



மசினகுடியில் இயற்கை வேளாண்மை குறித்து பெண்களுக்கு 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி முகாமிற்கு ஊட்டி சமூக சேவா இயக்குனர் அந்தோணிசாமி, திட்ட அலுவலர் சுப்ரபா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் இயற்கை உரம் தயாரித் தல், வீட்டு தோட்டங்களை உருவாக்குதல் குறித்து பயிற்சி அளிக் கப்பட்டது. இந்த பயிற்சி முகாமில் மசினகுடி பகுதியில் உள்ள சுய உதவி குழுக்களை சேர்ந்த ஏராளமான பெண்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு தோட்டக்கலை உதவி வேளாண்மை அலு வலர் அம்பிராஜன் இயற்கை வேளாண்மை குறித்து எடுத்து கூறினார்.

**மாவட்டம் முழுவதும் பரவலாக மழை: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

ஆண்டிப்பட்டி, தேனி மாவட்டத்தில் பரவலாக பலத்த மழை பெய்து வருகிறது. இதன் எதிரொலியாக அணைகளுக்கான நீர்வரத்து அதிகரித்துள்ளது.

அணைகளுக்கு நீர்வரத்து

தேனி மாவட்டத்தில் கோடை வெயில் சுட்டெரித்து வந்தது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக மழை பெய்து வருகிறது. குறிப்பாக அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்வதால், வறண்டு காணப்பட்ட ஆறுகளில் நீர்வரத்து தொடங்கியுள்ளது.

இதன் எதிரொலியாக முல்லைப்பெரியாறு உள்ளிட்ட அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. குறிப்பாக கடந்த சில மாதங்களாக வினாடிக்கு 50 முதல் 70 கனஅடி மட்டுமே தண்ணீர் வந்து கொண்டிருந்த வைகை அணையின் நீர்வரத்து நேற்று காலை வினாடிக்கு 555 கனஅடியாக உயர்ந்துள்ளது. இதனால் சரிவில் இருந்த வைகை அணை நீர்மட்டம் படிப்படியாக உயரத் தொடங்கியுள்ளது.

வைகை அணை

மேலும் மழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளதால், அணைகளின் நீர்மட்டம் கணிசமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வைகை ஆற்றின் நீர்ப்பிடிப்பு பகுதிகளான வெள்ளிமலை வனப்பகுதிகளிலும் கடந்த 2 நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மூல வைகை ஆற்று பகுதியில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று காலை 6 மணி நிலவரப்படி, வைகை அணையின் நீர்மட்டம் 36.78 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 555 கனஅடி தண்ணீர் வரத்து இருந்தது. அணையில் இருந்து குடிநீர் திட்டங்களுக்காக வினாடிக்கு 40 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர் இருப்பு 715 மில்லியன் கனஅடியாக காணப்பட்டது.

முல்லைப்பெரியாறு அணை

முல்லைப்பெரியாறு அணையின் நீர்மட்டம் கடந்த 14–ந் தேதி 111.10 அடியாக இருந்தது. நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழை காரணமாக நீர் வரத்து அதிகரித்து, 111.50 அடியாக உயர்ந்து உள்ளது. அணைக்கு

நீர்வரத்து வினாடிக்கு 708 கனஅடியாகவும் காணப்பட்டது. அணையில் இருந்து குடிநீருக்காக வினாடிக்கு 150 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. அணையின் மொத்த நீர் இருப்பு 1,150 மில்லியன் கனஅடியாக இருந்தது.

<u>மழை அளவு</u>

மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் நேற்று முன்தினம் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்) விவரம் வருமாறு:–வைகை அணை– 102, உத்தமபாளையம்– 25, வீரபாண்டி– 28, சண்முகாநதி– 5, கூடலூர்–23.5, ஆண்டிப்பட்டி–65, போடி–2.8, பெரியகுளம்–145, சோத்துப்பாறை–42, மஞ்சளாறு–65, மயிலாடும்பாறை–7.2.இதில் மாவட்டத்தில் அதிக அளவு மழை பதிவாகி இருப்பது பெரியகுளம் மற்றும் வைகை அணை நீர்ப்பிடிப்பு பகுதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

**திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் அதிகபட்ச மழை பதிவு**



திருப்பூர் மாவட்டம் முழுவதும் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. நேற்றைய நிலவரப்படி திருப்பூரில் 58 மில்லி மீட்டர் மழையும், பல்லடத்தில் 40 மில்லி மீட்டரும், அவினாசியில் 39.40 மில்லி மீட்டரும், காங்கயத்தில் 30 மில்லி மீட்டரும் பதிவாகியுள்ளது. அதிகபட்ச மழையளவாக தாராபுரத்தில் 110 மில்லி மீட்டர் மழையும், மூலனூரில் 108 மில்லி மீட்டர் மழையும் பதிவாகியுள்ளது.

குறைந்தபட்ச மழை அளவாக உடுமலைப்பேட்டையில் 25 மில்லி மீட்டர் மழை என, மாவட்டம் முழுவதும் 412 மில்லி மீட்டர் மழை அளவு பதிவாகியுள்ளது. மேலும் மாவட்டம் முழுவதும் சராசரி மழை அளவாக 58.86 மில்லி மீட்டர் அளவு மழை பெய்துள்ளது.

**மரக்கன்று நடும் விழா**



ஸ்ரீவில்லிபுத்தூர் சூளை விநாயகர் பள்ளியில் மரக்கன்று நடும் விழா நடந்தது. பள்ளி தாளாளர் குருசாமி வரவேற்று பேசினார். முருகன் தலைமை தாங்கினார். விழாவில் போத்தீஸ் அதிபர் சடையாண்டி பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நட்டு பேசினார். இதில் அப்துல்கலாம் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ் கலந்துகொண்டு பேசும்போது, இந்தியாவில் தண்ணீர் பஞ்சம் ஏற்படாமல் இருப்பதற்கும், நிலத்தடி நீர் குறையாமல் இருப்பதற்கும், மழை வளம் அதிகரிப்பதற்கும் மரங்கள் அவசியம். மாணவ பருவத்திலேயே மரம் நட்டு வளர்க்கும் உணர்வு வர வேண்டும்.மேலும் மாணவ–மாணவிகள் படிக்கும்போதே ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டும் என்றார். மரக்கன்று நடும் விழாவில் மதுரை மண்டல பாஸ்போர்ட் அதிகாரி மணிஷ்வர ராஜா, வருமானவரி துறை இணை ஆணையாளர் ரெங்கராஜன், ஸ்ரீவில்லிபுத்தூர் துணை போலீஸ் சூப்பிரண்டு முரளிதரன், மாவட்ட வன உயிரின காப்பாளர் அசோக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.